

# மின்மினி



மார்ச் 2018 மின்னல் 01, கதிர் 05

## சங்கமம் தமிழ்ப்பள்ளி

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்" ... குறள்: 071

### நிகழ்வுகள்

**மார்ச் 3rd 2018**
இரண்டாம் இடைநிலைத் தேர்வு (2nd mid-term exam)

**ஏப்ரல் 7th 2018**
பேச்சுப் போட்டி

### சிறப்புச் செய்திகள்

நமது மாணவர்கள் **Jonial Jerome**, **Shreya Chandran** மற்றும் **Shreshtha Peter Raj**, **Fairfax County** நடத்திய **Credit Exam for World Language** தேர்வில் தேர்ச்சிபெற்றுள்ளனர்.



Shreya Chandran



Shreshtha Peter Raj




தாரை, தப்பட்டையுடன் துடங்கிய **சங்கமம் தமிழ்ப்பள்ளியின் பொங்கல் விழா** நம் கிராமங்களில் நடைபெறும் பொங்கல் பண்டிகையை முன்னிறுத்தும் வகையில் கொண்டாடப்பட்டது. **போகிப்பொங்கல், மாட்டுப்பொங்கல், தைப்பொங்கல், காணும்பொங்கல்** ஆகிய நான்கு பொங்கலையும் கிராமங்களில் எப்படி கொண்டாடுவார்கள் என்பதை நமக்கு காண்பிக்கும் வகையில் **ஆடல், பாடலுடன்** நமது சிறார்கள் மிகச் சிறப்பாக அரங்கேற்றி அனைவரையும் மகிழ்வித்தனர். பொங்கலோடு சேர்ந்து **தா.இ.க** தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு **பட்டமளிப்பு** விழாவும் சிறப்பாக நடைபெற்றது. பொங்கல் விழாவின் வெற்றிக்கு பின்னால் இருந்த தன்னார்வலர்கள் அனைவருக்கும் சங்கமம் தமிழ்ப்பள்ளியின் வாழ்த்துக்கள்.



## சொல்லுங்க சொல்லுங்க!!!!

நான் கேட்டிருக்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லுங்க பார்க்கலாம் என்று **ஷ்ரேயா (நிலை நான்கு, ஆசிரியர்கள்: ஆர்த்தி, நீதி)** **மின்மினிக்கு** ஒரு சவால் விட்டு இருக்கிறாள். விடைகளை கண்டுபிடிக்க எனக்கு கொஞ்சம் உதவி செய்யுங்களேன்.



### இடமிருந்து வலம்

1. அரசரின் மகள்...
4. சுட்டிகளின் கனவு நாயகன்...
6. அரசர்கள், முன்னோர்கள், சாதனையாளர்கள் பற்றிச் சொல்வது...
8. அறிவுக் கண்ணைத் திறப்பது...
10. உலகம் போற்றும் தமிழ்ப் பொதுமறை...
12. தமிழர் பண்டிகை...
14. ஜல்லிக்கட்டு நாயகன்...
15. காகிதப் பறவை...
18. இசையோடு வருவது...
20. சுற்றிச் சுழன்று ஆடும்...
21. சுற்றுச்சூழல் கெட்டால்...
22. மனிதனின் ஈடில்லாத் தோழன்...

### மேலிருந்து கீழ்

1. தமிழோ, ஆங்கிலமோ எல்லா மொழிக்கும் இது முக்கியம்...
2. மீனின் சிறைச்சாலை...
3. மலையின் மகுடம்...
4. கூச்சலிடு என்பதை இப்படியும் சொல்லலாம்...
5. பழத்தின் வேறு சொல்...
7. முருகனின் மனைவி....
9. படிப்புடன் இதுவும் முக்கியம்...
10. ஒட்டகத்துக்கு இருப்பது...
11. தண்ணீர்ப் பாத்திரம்...
12. குழந்தைகளுக்குப் பிடித்தது...
13. ராமானுஜன் என்றதும் நினைவுக்கு வருவது...
15. தீபாவளித் தோழன்...
16. சிறியவர் வளர்ந்தால் பெரியவர், ஊர் வளர்ந்தால்...
17. இனிக்கும் கல்... கல்கண்டு அல்ல...
19. களிறு என்பது...
20. பால் கொடுக்கும்...

**என் பெயர் வீரமுரசு. எனது ஒலி வீர உணர்வினைத் தோற்றுவிப்பதாக இருக்கும். என் பயன்பாடு என்ன? சொல்லுங்க பார்க்கலாம்?**



A. தினச்செய்திகள் படிக்க
Read daily news

B. மன்னர் வருகை
King arrival

C. இயற்கைப் பேரிடரை அறிவிக்க
Natural disaster

D. போர்க்காலங்களில்
War time




## ஏறிப்பார்க்கலாம் வாங்க...

அட்டாலியில் அம்மா வைத்திருக்கும் மிட்டாய் நமக்கு வேண்டும் என்றால் இந்த ஏணியில் நாம் ஏறியாக வேண்டும். வாங்க, வாங்க ஏறலாம்.


சித்தார்த்: நிலை நான்கு
ஆசிரியர்கள்: ஆர்த்தி, நீதி

**வார்த்தை ஏணி** -- கீழே உள்ள வார்த்தையில் ஆரம்பித்து கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை பயன்படுத்தி படிப்படியாக மேலே உள்ள வார்த்தைகளை கண்டுபிடிக்கவும். எல்லா வார்த்தைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை.



## குட்டீஸ் உங்களுக்கு தெரியுமா? பேராசை பெரு நஷ்டமாம்!!

**யோகன், தேவேஷ்வர் மற்றும் நிதிஷ் பேராசை எப்படி நஷ்டத்தை கொடுக்கும் என்று நமக்கு அழகா ஒரு கதை மூலம் சொல்லி இருக்காங்க. படிச்சு பாருங்களேன்.**







யோகன்



தேவேஷ்வர்




நிதிஷ்

**நிலை நான்கு**
**ஆசிரியர்கள்:** ஆர்த்தி, நீதி



**ஆதித்தியா:** நிலை மூன்று
**ஆசிரியர்கள்:** யோகேஸ்வரி
சோபியா ஜேம்ஸ்




**எழுதி எழுதி பார்த்தேன் என்னால் நேராக எழுத முடியவில்லை. அதன் பின்னர் தான் தெரிந்தது இது நா நெகிழ் பயிற்சி என்று. நீங்க சொல்லிப்பாருங்களேன் உங்களால் நாக்கு குழறாமல் சரியாக சொல்ல முடியுதா என்று?**










இங்குள்ள மிருகங்களின் கடைசி எழுத்தை கண்டுபிடித்து, சரியாக பொருத்துங்க பிரண்ட்ஸ்.

## வரைந்து பழகுவோம் வாங்க




உங்களுக்கு ஒன்று, இரண்டு மூன்று தெரியுமா? தெரியும் என்றால் கவலைய விடுங்க நான் உங்களுக்கு இரண்டு எழுதி அதிலிருந்து எப்படி கொக்கு வரைவது என்று சொல்லிக் கொடுக்கிறேன்.



**சம்யுக்தா:** நிலை மூன்று
**ஆசிரியர்கள்:** யோகேஸ்வரி
சோபியா ஜேம்ஸ்

புள்ளிகளை வரிசைப்படி இணைக்கவும்.






**நான் விடுகிற கதைக்கு விடுகதைன்னு பேரு. என் விடுகதைக்கு பதில் சொல்லுங்க பார்க்கலாம்!!!**

ஒருத்தருக்கு கால்ல முள் ஏறிடுச்சு.. அந்த முள்ளை கையால எடுத்தா அது கைலயும் ஏறிடும்.. என்ன பண்ணலாம்னு அவர் நண்பர்கிட்ட கேட்டா, ஒரு விடுகதையை சொல்லி இதற்கான விடை தான் உனக்கான பதில்னாரு. அந்த விடுகதை.

**"பத்து ரத புத்திரனின் மித்திரனின் சத்ருவின் பத்தினியின் கால் வாங்கித் தேய்"**

**யாழினி ராஜேஷ்:** நிலை நான்கு
**ஆசிரியர்கள்:** ஆர்த்தி, நீதி

**இந்த உணவின் பெயர்களை கண்டுபிடிப்போமா நண்பர்களே??**








**பிரஜித் இராமகிருஷ்ணன்:** நிலை ஒன்று


**ஆசிரியர்கள்**
ஹரிதா,
நித்யா, தீபக்




குட்டீஸ் உங்களுக்கு புதிர்னா ரொம்ப பிடிக்குமாமே. ஷ்ரேயா (நிலை நான்கு) நமக்கு இந்த புதிர்களை கண்டு பிடிக்க சொல்லி, எவ்வளவு சீக்கிரம் கண்டு பிடிக்க முடியும் என்று கேட்டிருக்கிறாள்.

இந்த புதிர்களை கண்டு பிடித்து எவ்வளவு சீக்கிரம் கண்டு பிடித்தீர்கள் என்று மின்மினியிடம் சொல்லுங்கள். அடுத்த மின்மினி பதிப்பில் உங்கள் பெயர் மற்றும் புதிரை கண்டுபிடிக்க எடுத்துக்கொண்ட நேரம் வெளியிடப்படும்.

**ஆசிரியர்கள்:** ஆர்த்தி, நீதி




## மீன் பிடிக்கலாம் வாங்க



**ஓவியா சுந்தரம்**
நிலை: தா.இ.கா இடைநிலை 2

**ஆசிரியர்**
மஞ்சு ஷண்முகம்




நீங்க sea-food விரும்பியா? அப்படினா கண்டிப்பா மீன் சாப்பிட்டு இருப்பீங்க இல்லையா? ஆனால் நீங்களே மீன் பிடித்து சாப்பிட்டு இருக்கீங்களா? இல்லை என்றால் என்னுடன் வாங்க ஓவியா கூட சென்று மீன் பிடிப்போம்.

ஓ ஓ ஓவியாவுக்கு மீன் பிடிக்க தெரியுமாம் ஆனால் ஆற்றுக்கு வழி தெரியாதாம். இப்போ என்ன செய்யலாம்? ஒரு யோசனை, நாம் ஓவியாவுக்கு ஆற்றுக்கு செல்ல வழி காட்டி உதவுவோம், ஓவியா நமக்கு மீன் பிடிக்க உதவுவாள்.எப்படி என் யோசனை?

உங்களுக்கு என்னுடைய யோசனை பிடித்திருந்தால் ஆற்றுக்கு வழி காட்டுங்கள் பார்க்கலாம்.

உங்கள் குழந்தைகளுக்கு கட்டுரை அல்லது கதை எழுதுவதில் ஆர்வம் இருப்பின், அவர்களின் படைப்பை newsletter@sangamamtamilschool.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். குழந்தைகளின் படைப்பை ஆய்வு செய்த பின் அடுத்து வரும் **“மின்மினி”** செய்திமடல் பதிப்புகள் ஒன்றில், அவர்கள் படைப்பை மலரச் செய்வோம்.




# மஹாத்மா காந்தி


மஹாத்மா காந்தி அக்டோபர் 2,1869 ஆம் ஆண்டில் போர்பந்தர், இந்தியாவில் பிறந்தார். இவர் இந்திய நாட்டின் தந்தை என்று இந்திய நாட்டின் மக்கள் எல்லோரும் பெருமையுடன் கூறுவார்கள். காந்தி, இந்திய நாட்டின் வன்முறையற்ற சுதந்திரப் போராட்டத்தின் தலைவராக இருந்தார். காந்தி சட்டம் மற்றும் பல்வேறு மதங்களை படித்தார். இவர் சமாதானத்தில் நம்பிக்கை வைத்திருந்தார். இதனால்தான் இவரை அனைவரும் மஹாத்மா என்று கூப்பிடுவோர்கள். மஹாத்மா என்றால் நல்ல ஆன்மான்னு அர்த்தம்.



**படிச்சு பாருங்க படிச்சு பாருங்க மகாத்மா காந்திய பற்றி நான் எழுதியிருக்கும் குறிப்பை படிச்சு பாருங்க.**

**கயல் சதாசிவம்**
**நிலை:** மேல்நிலை
**ஆசிரியர்கள்:** மஞ்சு அய்யம்பாளையம், ரவிக்குமார்






**நான் நல்லா ஆடவும் செய்வேன், வரையவும் செய்வேன். எப்படி இருக்குது என்னுடைய ஓவியம்?**

**சம்ப்ரிதி தியாகு**

**நிலை:** மேல்நிலை
**ஆசிரியர்கள்:** மஞ்சு அய்யம்பாளையம், ரவிக்குமார்



# திருவள்ளுவர்

**திருக்குறள்** உலகப்புகழ் பெற்ற தமிழ் இலக்கியமாகும். இதனை இயற்றியவர் திருவள்ளுவர் என்று அறியப்படுபவர். இதில் 1330 குறள்கள் பத்து பத்தாக 133 அதிகாரங்களின் கீழ் தொகுக்கப் பெற்றுள்ளன. திருக்குறள் சங்க இலக்கிய வகைப்பாட்டில் பதினெண்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் இருக்கிறது. இந்நூல் அறம், பொருள், இன்பம் அல்லது காமம் என்னும் முப்பெரும் பிரிவுகளாய் (முப்பால்) பிரித்தும் அழகுடன் இணைத்தும் கோர்த்தும் விளக்குகிறது.

வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் திருக்குறள் கூறுவதால், அதைச் சிறப்பித்துப் பல பெயர்களால் அழைப்பர்: திருக்குறள், முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, திருவள்ளுவம் என்ற பெயர்கள் அதற்குரியவை. கருத்துக்களை இன, மொழி, பாலின பேதங்களின்றி காலம் கடந்தும் பொருந்துவது போல் கூறி உள்ளதால் இந்நூல் "உலகப் பொது மறை" என்றும் அழைக்கப்படுகிறது

நமது பள்ளியில் நடைபெற்ற திருக்குறள் போட்டியில் கலந்துகொண்ட நமது மாணவச் செல்வங்கள் மிக அழகாக திருக்குறளை ஒப்பித்து அதற்கு விளக்கமும் கொடுத்து நடுவர்களே அசரும் அளவுக்கு அசத்திவிட்டனர் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

## திருக்குறள் போட்டி முடிவுகள்

| AGE GROUP | FIRST PRIZE | SECOND PRIZE |
|---|---|---|
| 4-5 Yrs | Anvita Ramkumar | Samyuktha Senthilkumar |
| 6-7 Yrs | Aadithya Manojkumar | Prajith Ramakrishnan |
| 8-9 Yrs | Aegna Akulu Santhosh | Jai Sumedth |
| 10-11 Yrs | Ovyaswastika Sundaram | Kanishk Sivanandam |
| 12-13 Yrs | Sakthi Senthilnath | Prabav Vairamani |
| 14 and above | Smeetha James | - |